**செய்தி வெளியீடு எண்:655** **நாள்: 04.10.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (4.10.2017) கரூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு
தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர்
திரு.ப. தனபால் அவர்களே,

இந்த இனிய விழாவில்
சிறப்புரை ஆற்றி நல்ல பல கருத்துக்களை உங்களிடையே தெரிவித்த
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **ஓ. பன்னீர்செல்வம்** அவர்களே!

மாண்புமிகு மக்களவை
துணைத் தலைவர் டாக்டர் **தம்பிதுரை** அவர்களே!

இதுவரை டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா 15 கூட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. இன்றைக்கு 16வது கூட்ட விழா கரூரில் நடைபெற்று கொண்டிருக்கிறது.

இந்த விழா சீரும் சிறப்புமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்த
இந்த மாவட்ட மண்ணின் மைந்தர்
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
திரு. **எம்.ஆர். விஜய பாஸ்கர்** அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை
அரசுச் செயலாளர்,
திரு. **இரா. வெங்கடேசன்** அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய
பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **ஆர்.பி. மருதராஜா** அவர்களே!
கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர்

திருமதி. **எம். கீதா** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,
மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா
திரு. **இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி
**பா.வளர்மதி** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!
நன்றியுரை ஆற்ற உள்ள
கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **கு. கோவிந்தராஜ்** அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கிற
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

தலைமைக் கழக நிர்வாகிகளே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!

கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!
கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே!
பரிசு பெற்றுள்ள மாணவ மாணவிகளே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

கரூர், அமராவதி ஆற்றங்கரையில் அமைந்துள்ள அழகுமிகு வணிக நகரமாகத் திகழ்கிறது.

இந்து மத நம்பிக்கையின்படி
இறைவன் பிரம்மா தனது படைப்புத் தொழிலை இங்குதான் தொடங்கியதாக கருதப்படுகின்றது.
அதன் பொருட்டே இந்த ஊர் கருவூர் என்றழைக்கப்படுவதாகவும் கூறுவர்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கிரேக்க புலவர்கள் தங்கள் பாடல்களில் கருவூரை சிறந்த வாணிப மையம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் தங்கள் பாடல்களில்
**"கோருவூரா"** எனக் குறிப்பிட்டு உள்ளனர்.

தங்க நகைகள் ஏற்றுமதியில் கருவூர்
ஈடுபட்டிருந்ததை அறிகிறோம்.

அகழ்வாராய்ச்சியின் போது ரோமானிய நாணயங்கள் இங்கு
கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சங்க காலத்தில் புழக்கத்தில் இருந்த
ரோமானியக் காசுகள், கரூரில் மட்டும் தான்
மிகுதியாகக் கிடைத்திருக்கின்றன.

முற்காலத்தில் கரூரில் தங்க நகை வேலைப்பாடுகளும், வைரம் பட்டை தீட்டும் தொழிலும் சிறப்பாக நடந்திருக்கின்றன.

கரூர் சேரநாட்டின் தலைநகரமாக விளங்கியிருக்கிறது.
இங்கு ஆறு நாட்டார் மலையில் உள்ள
கல்வெட்டுகளில் கரூரை ஆண்ட
சேர மன்னர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

அமராவதி நதிக் கரையில் அமைந்துள்ள
வஞ்சி மாநகரை சேரன் செங்குட்டுவன்
தலைநகராகக் கொண்டு ஆண்டதாக
சிலப்பதிகாரம் கூறுகிறது.
இந்த வஞ்சி மாநகரே கரூர்

என்று கருதப்படுகின்றது.

சோழர், பாண்டியர், சங்க கால மன்னர்கள்,
விஜயநகர நாயக்கர்கள், மைசூர் அரசர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் ஆட்சியின் கீழும்
கரூர் இருந்திருக்கிறது.

‘**வேண்மாடம்**’ என்று அழைக்கப்பட்ட அரண்மனையைச் சுற்றி மதில் அரண் அமைக்கப்பட்டிருந்தது. இந்த வேண்மாடத்தை
மன்னன் இரும்பொறை ஆண்டு வந்தார்.

சங்க கால தமிழ் புலவர்களில் பெரும்பாலானோர் வாழ்ந்த தமிழ் மணக்கும் பூமி இந்த கரூர் பூமி.

அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை போன்ற சங்க இலக்கியங்களில் பாடிய கண்ணம்பாளனார், கருவூர் கதப்பிள்ளை சாத்தனார், கரூர் கிழார், அரச பரம்பரையைச் சார்ந்த
கருவூர் சேரமான் சாத்தன், கருவூர் நன்மார்பனார், கருவூர் பவுத்திரனார், கரூர் பூதஞ்சாத்தனார்,
கரூர் பெரும் சதக்கத்துப் பூதனாதனார்
போன்ற இன்னும் பல புலவர்கள் வாழ்ந்த பூமி
இந்த கரூர் மாவட்டம் ஆகும்.

புலவர்களால் பெருமையும் புகழும் பெற்ற கருவூர் கலிங்க நாட்டு பெருவணிகர் ஒருவரையும் பெரும்புலவராக மாற்றியிருக்கிறது.

கி.மு 3–ஆம் நூற்றாண்டில் கலிங்க நாடு என்றழைக்கப்பட்ட ஒரிசா மாநிலத்தில் பெரும் வணிகனாக திகழ்ந்தவர்,
இந்த கருவூர் புலவர்களின் புலமையை அறிந்து
தமிழ் மேல் ஆர்வம் கொண்டு கருவூருக்கு வந்து தமிழ்ப் பயின்று பெரும் புலவனாகி
பின் அகநானூற்றில் 183–வது பாடலை எழுதி
‘**கருவூர் கலிங்கத்தார்**’ என்ற பெயரும் பெற்று
பெரும் புலவனாய் விளங்கினார்.
தேவாரப் பாடல் பெற்ற ஏழு தலங்களில்
கரூர் பசுபதீஸ்வரர் ஆலயமும் ஒன்று.

பேரரசர் சோழனின் ஆன்மிகக் குருவும்,
தஞ்சை பெரிய கோயிலின் லிங்கத் திருவுருவைப் பிரதிஷ்டை செய்தவரும்,
திருவிசைப்பா இயற்றியவருமான **கருவூர் தேவர்** அவதரித்த
ஊர் இந்த கரூராகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், 1984 –ஆம் ஆண்டு கரூர் மாவட்டத்திலுள்ள
புகளூரில் டி.என்.பி.எல். காகித ஆலையை
தொடங்கி வைத்தார்கள்.
இது எல்லாம் கரூர் மாவட்டத்திற்கு கிடைத்த பெருமைகள். ஆகவே, அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை கரூர் மாவட்டம் ஒரு முதன்மையான மாவட்டம் விளங்கி கொண்டிருக்கிறது என்பதற்கு இதெல்லாம் சான்று என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

புகளூர் ஆசியக் கண்டத்திலேயே மிகப் பெரிய
காகித ஆலையாக திகழ்ந்து கொண்டிருக்கிறது.

அதே ஆலையில், 100 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலை
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால்
2013 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
ஆட்சியின் போது 1995 –ஆம் ஆண்டு
**கரூர்** தனி மாவட்டமாக உருவாக்கி இந்த மாவட்டத்திற்கு
பெருமை சேர்த்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இன்றைக்கு கரூர் ஒரு தொழில் நகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.
லாரி, பேருந்து கட்டுமான தொழிலுக்கு பெயர் பெற்ற ஊர் கரூர்.
ஆகவே, இந்த ஊர் செழிப்பான ஊர். பல்வேறு தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. ஆகவே இந்த பேருந்து கட்டுமான தொழிலுக்கு கரூர் தான் பெயர் பெற்ற ஊராக கருதப்படுகிறது.

அதேபோல கொசு வலை தயாரிக்கின்ற மாவட்டம் இந்த கரூர் மாவட்டம்.
கிட்டதட்ட 1800 கோடி ரூபாய் கொசுவலை தயாரிக்கும் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.
இங்கிருக்கின்ற மாவட்ட மக்கள், இங்கிருக்கின்ற கொசுவலை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை சேர்ந்தவர்கள், இந்தியா மட்டுமல்ல வெளிநாட்டிற்கும் கொசுவலை தயாரித்து அனுப்பக்கூடிய தொழில்வளம் மிக்க மாவட்டம் இந்த கரூர் மாவட்டம்.

அதேபோல் போர்வை, ஆண்டிற்கு 3000 கோடி ரூபாய் ஏற்றுமதி செய்யக்கூடிய பகுதியாக இன்றைக்கு கரூர் மாவட்டம் விளங்குகிறது. போர்வை தயாரிக்கினற மிகப்பெரிய மாவட்டமாக திகழ்கிறது. போர்வை அதிகளவில் ஏற்றுமதி செய்யக்கூடிய மாவட்டம் இந்த கரூர் மாவட்டம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
தொழில் வளம் மிகுந்த மாவட்டம் இந்த மாவட்டம்.
விவசாயம், தொழில், ஜவுளி ஆகிய மூன்று ஒருங்கே அமைந்த மாவட்டம் இந்த கரூர் மாவட்டம்.

கரூர் மாவட்டத்திலுள்ள தோகை மலையில்
கிடைக்கும் வண்ண பளிங்கு கற்கள்
உலக அளவில் புகழ் பெற்றுள்ளன.

கரூர் அரவங்குறிச்சி பகுதியில் விவசாய பெருங்குடி மக்கள்
அதிக அளவிலான முருங்கை மரங்கள் பயிரிடப்படுகின்றன.
இங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற முருங்கைக்காய் இங்கே மட்டுமல்ல
வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அந்த அளவுக்கு
முருங்கைக்காய் அதிகளவில் உற்பத்தி செய்கின்ற மாவட்டம் இந்த கரூர்
மாவட்டம்.

கரூர் கைத்தறி மற்றும் விசைத்தறி
ஜவுளி உற்பத்தியில் உலகளவில் பிரசித்தி பெற்றது. இவ்வளவு பழமையும்
பெருமையும் வாய்ந்த
இந்த கரூரில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின்
நூற்றாண்டு விழாவை சிறப்பாக எழுச்சியாக கொண்டாடுவதில்
பெருமைக்குரிய விஷயம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்கிறேன்.

பாசம் மிக்க மக்களாகிய உங்கள் அனைவரின் உள்ளங்களிலும்
குடிகொண்டிருக்கும்
உங்கள் வீட்டுப் பிள்ளை, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களைப் பற்றி அடுத்த தலைமுறையினரும் நன்றாகத் தெரிந்து
கொள்ளவேண்டும் என்ற நோக்கம் வெற்றி பெற்று இருக்கின்றது என்பது
ஒவ்வொரு மாவட்ட விழாவிற்கும் வருகை தரும் மக்கள் கூட்டம் உறுதி
செய்கின்றது. என் பங்கிற்கு நானும்,
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை
உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகின்றேன்.

தான் காலெடுத்து வைத்த திரைத் துறையிலும், அரசியல் துறையிலும்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மகத்தான வெற்றிகளை
அடைந்தார்கள். அந்த வெற்றிகளுக்குப் பின்னால் எத்தனை முயற்சிகள்
இருந்தன என்பதை
நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.
தொடக்க காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு
எதிர் காலத்தில்
தான் பெரிய கதாநாயகனாக உயரமுடியும் என்ற நம்பிக்கை குறைவாக
இருந்ததாம்.

காரணம் அப்போதெல்லாம் சொந்தக் குரலில்
பாடத் தெரிந்தவர்கள்தான் கதாநாயகனாக
இருக்க முடியும். ஆனால், திரு. எம்.ஆர். ராதா,
திரு. ரஞ்சன் போன்ற நடிகர்கள் பாடத் தெரியாமலேயே கதாநாயகர்களாக
ஆனவர்கள் என்பதால்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும் அந்த நம்பிக்கை
துளிர்த்தது.

அதே போல, தனக்கு முன்பு திரையுலகத்தில்
வெற்றி பெற்ற கதாநாயகர்கள்
எப்படி எல்லாம் செல்வாக்கு இழந்தார்கள் என்பதை ஆராய்ந்து, கண்டுபிடித்து,
தான் நடிக்கும் கதாபாத்திரங்களில் கூட தனி மனித ஒழுக்கக் கேடுகள்
இல்லாதவாறு பார்த்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்,
கெட்ட பழக்கங்கள் என்று மக்கள்
எதையெல்லாம் கருதினார்களோ,

அவைகள் எதுவும் தன்னிடம் இல்லாதவாறு
கவனமாக பார்த்துக்கொண்டார்கள்.
அதனால் தான், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மக்களின் மனங்களில் வாழ்ந்து,
மக்கள் தலைவராக உயர்ந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு
வாயில்லா ஜீவன்கள் மீதும் அளவு கடந்த பாசம் இருந்தது. அதனால்தான் சென்னையிலிருந்து
சற்று தள்ளி ராமாவரத்தில் பல ஏக்கர் நிலத்தை வாங்கி அதில் பெரிய தோட்டம் அமைத்து நடுவில் வீடு கட்டி மாட்டுப் பண்ணை அமைத்திருந்தார்கள்.
அந்த வாயில்லா ஜீவன்களுக்கும் வாழ்வளித்தவர் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அவர்கள்.

தன் படங்களுக்கு தலைப்பு வைப்பதில் கூட
அதிக கவனம் செலுத்தியவர்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

தான் நடிக்கப்போகும் ஒரு படத்திற்கு
'நல்லதுக்கு காலமில்லை' என்று அந்த படத்தின்
வசன கர்த்தா திரு மா. இலட்சுமணன்
தலைப்பு வைத்திருந்தார்.

ஆனால், அதை மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
ஏற்கவில்லை. இந்த தலைப்பு மக்களிடம் எதிர்மறை சிந்தனையை ஏற்படுத்தும்.

"**நல்லது வென்றே தீரும், தீயது தோற்கும்** போன்ற கருத்தைதான் நாம் சொல்லவேண்டும் –
எனவே, அந்த படத்தின் தலைப்பை
**'திருடாதே'** என்று மாற்ற வேண்டும்"
எனக் கூறினார்கள்.

மக்கள் சேவை செய்து மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், மக்கள் மனங்களில் நீங்கா இடம் பெற்றது ஒரு விதம் என்றால், தன்னுடைய தோற்றத்தை கூட வித்தியாசமாக மக்கள் மனதில்
பதிய வைத்தவர் புரட்சித் தலைவர் அவர்கள்.

செயலிலும் சரி, தோற்றத்திலும் சரி,
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களை மிஞ்சியவர்கள் யாரும் இல்லை.

1968 –ஆம் ஆண்டு 'அடிமைப் பெண்'
என்ற படத்தின் படப்பிடிப்புக்கு
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனது மனைவி
திருமதி. ஜானகி அம்மையாருடன்
ஜெய்ப்பூருக்கு சென்றிருந்தார்கள்.

அப்போது ராஜஸ்தானின் முதலமைச்சராக இருந்த
திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள்,
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் தம்பதியினரை விருந்துக்கு அழைத்திருந்தார்கள்.

விருந்தின் நிறைவில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு
வெள்ளைத் தொப்பி
ஒன்றை அன்புடன் போட்டு விட்டார்கள்.

அந்த தொப்பி மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மிகவும் அழகாக இருந்தது என்று அனைவரும்
பாராட்டினார்கள்.
திருமதி. ஜானகி அம்மையார் அவர்கள்,
கருப்பு கண்ணாடி ஒன்றைக் கொடுத்து,
"இதை அணிந்து கொள்ளுங்கள்.
இனிமேல் நீங்கள் இதே தோற்றத்தில்
வெளியில் சென்றால், மக்கள் உங்களை
நன்றாக ரசிப்பார்கள்", என்றார்கள்.

அதிலிருந்து மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்களுக்கு வெள்ளை நிற தொப்பியும், கருப்பு நிற கண்ணாடியும்
அணியும் பழக்கம் ஏற்பட்டது.
அதுவே, பின்னாளில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
அடையாளமாகவும் மாறியது.

திரை உலகில் ஒரு பெரிய புரட்சியை நடத்தி

வெற்றி வாகை சூடிய பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அரசியல் களத்தில் நுழைந்த போது தமிழ் நாட்டு மக்கள் அவரை இரு கரம் கூப்பி வரவேற்றார்கள்.

காரணம், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் சொல்லும், செயலும் ஒன்றாகவே இருந்தது.

**“நாடென்ன செய்தது நமக்கு**
**என கேள்விகள் கேட்பது எதற்கு,**
**நீ என்ன செய்தாய் அதற்கு,**
**என நினைத்தால் நன்மை உனக்கு”**

என பாடிய நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயம் தமிழ் நாட்டை சிறந்த முறையில் ஆட்சி செய்வார் என்று மக்களுக்குத் தெரிந்து இருந்தது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் கடைசியாக நடித்த படம்
**‘மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்’.**

படப் பிடிப்பு முடிவதற்குள் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை மக்கள்,
தமிழ் நாட்டின் முதலமைச்சராக்கிவிட்டார்கள்.
அந்தப் படத்தின் கடைசி டப்பிங் பணி முடிந்ததும்,
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
ஒலி பெருக்கியை தொட்டுக் கண்களில்
ஒற்றிக் கொண்டார்கள். வாகினி தியேட்டர் நிலத்தை
தொட்டு முத்தமிட்டார்கள்.

வெளியே வந்ததும் நிறைய பேர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களைப் பார்க்க கைகளில்
மலர் மாலைகளுடன் காத்திருந்தனர்.
அவர்களைப் பார்த்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
“நான் திரை உலகுக்கு விரும்பி வரவில்லை, – காலம் என்னை திரை உலகிற்கு தள்ளிவிட்டது. இன்றைக்கு நான் திரை வாழ்க்கையில்
வெற்றி அடைந்து விட்டேன்.

என் சினிமா வாழ்க்கையில் மகாராஜனாகவும், சக்கரவர்த்தியாகவும் கூட இருந்துவிட்டேன். நாளைக்கு நான் அடையப் போவது
வெறும் மந்திரி பதவிதான்'',

நாளைக்கு மந்திரியானாலும்
எம்.ஜி.ஆர். – எம்.ஜி.ஆர் தான்,
அதுக்கு நீங்க எல்லோரும் தந்த மகத்துவத்தை
நான் மறக்க மாட்டேன், நன்றி!!
என தான் மக்கள் பணி
ஆற்ற இருப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள்.

மக்களின் எண்ணப்படியே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ் நாட்டை சிறந்த முறையில் ஆட்சி செய்தார்கள். ஒரு முதிர்ச்சி பெற்ற, ஆளுமை திறன் கொண்ட அரசியல் தலைவராக தன்னை மாற்றிக் கொண்டார்கள்.

தமிழ் நாட்டில் தலைதூக்கிய அத்தனை பிரச்சனைகளுக்கும் தன் அறிவுத் திறமையால் சுமூகமாக தீர்வு கண்டார்கள்.

அதற்கு உதாரணமாக ஒரு நிகழ்வை இங்கே குறிப்பிடுகின்றேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் படங்களை கர்நாடகாவில் திரையிட அனுமதிக்கக்கூடாது என்று, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தலைவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.
அன்னாரை நேரில் சந்தித்து பேச
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பெங்களூர் சென்றார்கள்.
கோபக்காரரான அவரை
தனியே சென்று சந்திக்க வேண்டாம் என
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களை பலர் தடுத்து நிறுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கேட்கவில்லை.
இருவருக்குமான சந்திப்பு கர்நாடகாவில் உள்ள ஒரு ஹோட்டலில் நடந்தது.

**''என்னை பார்க்க வர்ரதுக்கு என்ன காரணம்''?** என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் அத்தலைவர் கேட்டார்.

**‘தமிழ்படங்கள் பெங்களூரில் ஓடக்கூடாது என்று சொன்னீர்களாம், அதுக்கு என்ன காரணம்  என்று யாரும் சரியாக சொல்லவில்லை.**
**உங்களிடமே நேரில் கேட்டுவிடலாம் என வந்தேன்’’** என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கூறினார்கள்.

**‘‘எங்கள் கர்நாடக மாநிலத்தில் கன்னடப் படம் ஓடுவதில்லை, உங்க தமிழ் படம் தான் ஓடுகிறது’’. அதனால் தான்,** என்றார் அந்த தலைவர்.
நீங்கள் தமிழ் படத்தைத் திரையிட விடாமல் தடுத்தாலும், பாதிப்பு கன்னடக்காரர்களுக்குத்தான். நாங்கள் எடுக்கிற தமிழ் படங்களில் பணிபுரிகிறவர்களில் பெரும்பாலானோர்
உங்கள் மாநிலத்துக்காரர்கள் தான்.

இயக்குனர் பந்துலு, சுந்தர்ராவ் நட்கர்னி போன்ற இயக்குநர்கள் உங்கள் மாநிலத்துக்காரர்கள் தான். அங்கே உள்ள ஸ்டூடியோ முதலாளி,
நடிகைகள் சரோஜா தேவி போன்றவர்கள்
உங்க மாநிலத்துக்காரர்கள்தான்.

உங்க  மாநிலத்து ஹீரோ ராஜ்குமார் அவர்களுக்கு
பூர்விகம் தமிழ் நாடு தான்.

உங்க மாநில வி.ஐ.பி.க்களுக்கு
எங்கள் ஊரில் பெரிய பெரிய வீடுகள் உள்ளன.
எங்கள் மாநிலத்துக்காரர்களுக்கும்
இங்கு வீடுகள் இருக்கின்றன.
தூத்துக்குடியில் தான் சங்கு விளைகிறது.
அவற்றால் தான் உங்கள் பிள்ளைகளுக்கு
பால் வார்க்கிறீர்கள்.  இதற்கு  மேலேயும் நீங்கள்
தமிழ் படத்தை எதிர்க்க விரும்பினால்
என் படங்களை கன்னட பகுதிக்கு
விற்க வேண்டாம் என்று சொல்லிவிடுகின்றேன்”,
என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கூறினார்கள்.
உடனே அந்த தலைவர் எழுந்து நின்று,  மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கையை பிடித்து
‘இனிமேல், உங்கள் படத்துக்கு நானே பேனர் கட்டுகிறேன், போஸ்டரும் ஒட்டுகிறேன்,’ என்றார்.

இவ்வாறு எதிரிகளையும் பணிய வைக்கும் சாமர்த்தியம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் இருந்தது என்பதற்கு இப்படி எத்தனையோ சம்பவங்களைக் கூறலாம்.

திரை வாழ்க்கையில் மட்டுமல்ல, அரசியல் வாழ்க்கையிலும் இப்படி எத்தனையோ பிரச்சனைகளை சாதுர்யமாக தீர்த்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களிடம் கற்ற பாடம்தான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் தன் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட **பிரச்சனைகளை –** பிரச்சனைகளின் தன்மைக்கேற்றவாறு தீர்த்தார்கள்.

எத்தனை மக்கள் பணி ஆற்றினாலும் அதை குறை சொல்வதுதான் எதிர்க் கட்சிகளின் பணி என்ற இலக்கணம் வகுத்துக் கொண்டிருப்பார்கள்.

நியாயமான எதிர்ப்புகளை சரிசெய்வதும், காழ்ப்புணர்ச்சியில் கிளம்பும் எதிர்ப்புகளை விட்டுத் தள்ளுவதும்தான் நல்ல ஆட்சியாளர்களின் திறமை.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள்
மக்கள் நலத் திட்டங்களுக்காக ஆட்சி நடத்துகின்றோம். அந்த திட்டங்களுக்கு குறுக்கே வருகிறவர்களை மக்கள் பாடம் கற்றுக் கொடுப்பார்கள்.

எங்கள் திட்டங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு முடிவில்லாமல் தொடரும். அப்படித்தான் இந்த இனிய விழாவில் கரூர் மாவட்டத்திற்கான திட்டங்களை செயல்படுத்துகின்றோம்.

அம்மாவின் அரசு கரூர் மாவட்டத்திற்கு
கடந்த ஆறு ஆண்டுகளில் செய்த சாதனைகளை சொல்வதற்கு நிறைய இருக்கின்றன.

அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே கூற விரும்புகிறேன்.
ஏனென்று சொன்னால், எதிர்க்கட்சி சார்ந்தவர்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாக சேர்ந்து கொண்டு பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவில் என்ன செய்தார்கள், என்ன சாதனைகள் படைத்தார்கள் என்று விமர்சனம் செய்கிறார்கள்.

ஆகேவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே செய்த சாதனைகள் புரட்சித் தலைவர் அவர்கள் விட்டுச்சென்ற பணிகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வாறு தொடர்ந்தார்கள் என்பதை சுட்டிக் காட்ட இங்கே சில திட்டங்களை விரிவாக சொல்ல விரும்புகிறேன்.
ஆகவே, எதிர்கட்சிகள் சொல்கின்ற குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க விரும்புகின்றோம். நாங்கள் செய்த சாதனைகளை இங்கே பட்டியலிட்டு காட்ட விரும்புகிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கரூர் மாவட்டத்தில் 61 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 37ஆயிரத்து 486 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. கிட்டதட்ட 37000 மாணவர்கள் பயன்பெற்று இருக்கிறார்கள்.
புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமத்திலிருந்து நகரத்திற்கு ஏழை எளிய மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்கு செல்ல வேண்டும் என்ற உயரிய நோக்கில் அறிவுபூர்வமான கல்வி, விஞ்ஞானபூர்வமான கல்வி இந்த மாணவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக தொலைநோக்கு சிந்தனையோடு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு மட்டும் 37ஆயிரத்து 486 மடிக்கணினிகளை கொடுத்து அறிவுஜீவியாக வளர்த்த தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

ஆகவே, எதிர்க்கட்சிகளை சேர்ந்தவர்கள் எல்லாம் வேண்டுமென்றே திட்டமிட்டு இன்றைக்கு தினந்தோறும் ஒவ்வொரு பொய்யை அவிழ்த்துவிட்டு கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அறிவுபூர்வமான கல்வி மாணவர்களுக்கு அம்மாவின் அரசினால் கிடைத்திருக்கிறது.

12 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
37ஆயிரத்து 694 மாணாக்கர்களுக்கு
மிதிவண்டி வழங்கப்பட்டுள்ளது. நம்முடைய மாவட்டம் கிராமம் சூழ்ந்த மாவட்டம். ஆகவே கிராமத்தில் இருக்கின்ற மாணவர்கள் ஆங்காங்கே இருக்கின்ற பள்ளிகளுக்கு உரிய நேரத்தில் சென்று வீடு திரும்புவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு நமது மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கினார்கள். இந்த மாணவர்களது வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கை.

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 25ஆயிரத்து 653 விவசாயிகளுக்கு

15 கோடியே 7 லட்சம் ரூபாய்
நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அம்மா அவர்கள் ஏழை எளிய விவசாயிகள் நலம்பெற வேண்டும் என்பதற்காக போடப்பட்ட திட்டம் இந்த திட்டம். இதன்மூலம் 25ஆயிரத்து 653 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

87 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
ஏழை எளிய குடும்பங்களுக்கு
சூரிய மின் சக்தியுடன் கூடிய 5 ஆயிரத்து 232
பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன.
ஆகவே, அம்மாவின் ஆட்சியில் தான் ஏழைகள் மகிழ்ச்சியாக வாழ்கின்ற சூழ்நிலையை பார்க்கிறோம்.
வீடில்லாத ஏழைகளுக்கு வீடுகள் கட்டி கொடுத்து அவர்கள் வாழ்வதற்கு உத்தரவாதம் வழங்கிய தலைவி
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ்
125 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
10ஆயிரத்து 654 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

தாய் திட்டத்தின் கீழ் கிராமப்புறம் வளர்ச்சி அடைய வேண்டும், கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கு அடிப்படை வசதிகள் நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையிலே தாய் திட்டத்தை கொண்டு வந்து கிராமப்புற மக்களின் வாழ்க்கையை உயர்த்திய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.
தாய் திட்டத்தின் கீழ் 157 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 2ஆயிரத்து 174 குக்கிராமங்களில்
65 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
3,849 பணிகள் நடைபெற்றுள்ளன.
இதெல்லாம் அம்மா அரசு செய்த சாதனைகள் என்பதை எதிர்க்கட்சிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஊரக வளர்ச்சித் துறையில், நபார்டு திட்டத்தின் கீழ்
50 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
92 கிராமப்புற சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.
கிராமத்தில் சாலைகள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் இத்தனை நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள்.

கரூர் நகராட்சியில் 68 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் காவிரி கூட்டுகுடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
மக்களுக்கு தங்குதடையின்றி பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய ஆட்சியிலே கூட்டுக் குடிநீர் திட்டம் கரூர் நகராட்சி பகுதி மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையின் மூலம்
43 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
112 புதிய அலுவலக கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வித் துறையின் மூலம்
16 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
பள்ளிகளில் கட்டுமான பணிகள்
மேற்கொள்ளப்பட உள்ளன.

16 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
குடிநீர் மற்றும் கழிப்பிட வசதி
கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன,

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில்
99 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவில்
275 குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆகவே இன்றைக்கு தமிழ்நாட்டில் குடிநீர் பிரச்சினை இல்லை என்பதை உருவாக்குவதற்கு இந்த மாவட்ட மக்களுக்கு 99 கோடியே 43 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
236 தனிமின்விசை குடிநீர்
திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் 39 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
7 இடங்களில் புதிய மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தங்குதடையில்லாமல் மின்சாரம் வழங்குவதற்காக இந்த திட்டத்தை அம்மாவினுடைய ஆட்சியிலே நிறைவேற்றப்பட்டன.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக, 26 கோடியே 67 லட்சம் ரூபாய் செலவில் 25 பாலங்கள், சாலைப் பணிகள் மற்றும் சிறு பாலப் பணிகள் நடைபெறுகின்றன.
மேலும் 22 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
3 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
4 கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில்
3 பாலங்கள் அமைக்கும் பணிகள்
நடைபெற்று வருகின்றன.
நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்புத் துறையின் கீழ் 367 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் 718.50 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

15 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
பசுபதி பாளையத்தில் பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

16 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
கக்காலியூர் முதல் காந்திகிராமம் வரை
நான்கு வழிச் சாலை மற்றும்

காந்தி கிராமம் முதல் வீராக்கியம் வரை
6 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
இருவழிச் சாலை அமைக்கும் பணிகள்
நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான
மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்
12ஆயிரத்து 680 பயனாளிகளுக்கு
23 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு
நிதியுதவி திட்டத்தின் கீழ்
53 ஆயிரத்து 952 கர்ப்பிணி தாய்மார்களுக்கு
38 கோடியே 3 லட்சம் ரூபாய்
நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

சிறு குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு
செலுத்த வேண்டிய 129 கோடியே 28 லட்சம் ரூபாய் தள்ளுபடி
செய்யப்பட்டுள்ளது.
ஆகவே, விவசாயிகளின் கோரிக்கையை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றி
இருக்கிறது.
இதன் மூலம் 27 ஆயிரத்து 939 விவசாயிகள்
பயன் பெற்றுள்ளனர்.

மகசூல் பாதித்த 34 ஆயிரத்து 58 விவசாயிகளுக்கு இடுபொருள் மானியமாக 14 கோடியே 78 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

குடிமராமத்து பணி திட்டத்தின் கீழ்
ஒரு கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
29 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
37 சிறு பாசன குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளன.

புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு விவசாயிகளின் அரசு.
குடிமராமத்து திட்டத்தின் மூலமாக ஆங்காங்கே இருக்கின்ற ஏரி, குளங்கள் விவசாயிகளின் பங்களிப்போடு வண்டல் மண் அள்ளப்படுகிறது. அந்த வண்டல் மண் விவசாயிகளுக்கு இலவசமாக அளிக்கின்றோம். அந்த வண்டல் மண்ணை விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு அடிஉரமாக இடுகிறார்கள். ஆகவே நிலங்கள் பண்படுத்தப்படுகிறது. அப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை அம்மா அரசு விவசாயிகளுக்கு அளித்திருக்கிறது. வண்டல் மண் அள்ளப்படுவதால் ஏரி ஆழப்படுகிறது. அப்படி ஆழப்படுத்தப்படுகின்ற போது, பருவமழை பொழிகின்ற போது மழைநீர் முழுவதும் சேகரிக்கக் கூடிய சூழ்நிலை அம்மா அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இதனால் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு நிலத்தடி நீர் உயரும் சூழ்நிலையை விவசாயிகளுக்கு அரசு உருவாக்கி இருக்கிறது.

விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் திட்டத்தின் கீழ் 9 ஆயிரத்து 10 பேருக்கு
8 லட்சத்து 3 ஆயிரத்து 425 கன மீட்டர்
வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது.

இன்று நான் 15 கோடியே 39 லட்சம் ரூபாய்
மதிப்பிலான 26 கட்டடங்களை
திறந்து வைத்துள்ளேன்.

இன்று பல்வேறு துறைகளின் சார்பில்
22 ஆயிரத்து 282 பயனாளிகளுக்கு
88 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பிலான
நலத் திட்ட உதவிகளை வழங்க உள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து
இன்று வரை மாநிலம் முழுவதும் நிறைவடைந்த
8 ஆயிரத்து 435 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பிலான 34 ஆயிரத்து 70
திட்டப் பணிகளை
தொடங்கி வைத்தும், 3 ஆயிரத்து 482 கோடியே
5 லட்சம் ரூபாய் மதிப்பிலான
6 ஆயிரத்து 716 பணிகளுக்கு
அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம், 11 ஆயிரத்து 917 கோடியே
73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான
40 ஆயிரத்து 786 பணிகள்
செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாவட்டந்தோறும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடுவது மட்டும் எங்கள் நோக்கம் அல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் மக்களுக்கு எத்தகைய திட்டங்களை வழங்க வேண்டுமென்று எண்ணியிருந்தார்களோ அதையெல்லாம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவின் மூலமாக
நாங்கள் அறிவித்தும், நிறைவுற்ற திட்டங்களை தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு
அடிக்கல் நாட்டியும் வருகின்றோம்.

இதை அறியாமல் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவதையே தவறு என்பது போல.. அதையும் அரசியலாக்க முயற்சிக்கிறார்கள்.

மக்களுக்கு நல்லது செய்வதற்கு
நாங்கள் யாருக்கும் பயப்படவோ,
பதில் சொல்லவோ அஞ்சவோ தேவையில்லை என்பதை இந்த தருணத்தில்
தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் மக்கள் சேவையை
மகேசன் சேவையாக கருதி
மக்கள் தொண்டு ஆற்றுவதில்
ஒரு காலமும் பின்வாங்க மாட்டோம்.
மக்கள் பலம் ஒன்றே எங்களுக்கு போதும்.

தவறானவர்களை பிடித்துக் கொண்டு
தவறான திசைக்கு போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களையும் நாங்கள் காப்பாற்றி
தாய் வீட்டிற்கு கொண்டு வருவோம்.

இதை கூறுகிறபோது எனக்கு கதை
ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. இக்கரையில் இரண்டு பேர்
நின்று கொண்டிருக்கிறார்கள்.

எப்படி அக்கரைக்குப் போவது என்று யோசிக்கும் நேரத்தில் ஒரு காளை மாடு
அங்கே வந்தது.
அப்படியே ஆற்றில் பாய்ந்து, நீந்த ஆரம்பித்தது.
இதைப் பார்த்த இரண்டு பேரில் ஒருத்தன்
குபீர் என்று ஆற்றில் குதித்து,
அந்தக் காளை மாட்டின் வாலைக்
கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

காளை மாடு சுலபமாக அவனை இழுத்துச் சென்று அக்கரையில்
சேர்த்துவிட்டது.

அடுத்தவன் பார்த்தான்.
நமக்கும் ஒரு வால் கிடைத்தால்
நன்றாயிருக்கும் என்று எதிர்பார்த்திருந்தான்.

இந்த நேரம் ஒரு ஆடு வந்து ஆற்றில் குதித்தது.  இதுதான் நேரம் என்று இவனும் ஆற்றில் குதித்து,
அந்த ஆட்டின் வாலைப் பிடித்துக் கொண்டான்.

இந்த மனிதனை இழுத்துக் கொண்டு
அந்த ஆட்டால் ஆற்றில் நீந்த முடியவில்லை.
ஒரு கட்டத்தில் ஆடும் அந்த மனிதனும்
ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள்.

அவர்கள் போக நினைத்த இடம் வேறு,
போய்க் கொண்டிருக்கின்ற  திசை வேறு.
இப்படித்தான் சிலர் ஆட்டின் வாலைப் பிடித்துக் கொண்டு கரை சேர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

யார் என்பது உங்களுக்கு புரியும் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
தனது திரைப்படத்தில்
**“பொது நீதிக்கும் நேர்மைக்கும் பயந்துவிடு,**
**நல்ல அன்புக்கும், பண்புக்கும் வளைந்து கொடு, இன்றோடு போகட்டும் திருந்திவிடு**
**உந்தன் இதயத்தை நேர்வழி திருப்பிவிடு”**
என்று பாடியது இவர்களுக்குத் தான் பொருந்தும் நான் கருதுகிறேன்.
யார் என்பது உங்களுக்கு புரியும் என்று நான் நினைக்கிறேன்.

**உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார். இந்த மாவட்டத்திற்கும் ஆட்சிக்கும் துரோகம் செய்து விட்டார் என்று குறிப்பிட்டார். அது உண்மை தான். அதற்கு நாங்களும் துணை போய் விட்டோம்.**
ஏனென்று சொன்னால், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த பொழுது, அப்போது அரவக்குறிச்சிக்கு இடைத்தேர்தல் வந்தது.  அந்த இடைத்தேர்தலிலே, தலைமைப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்று இங்கே என்னை நியமித்தார்கள். திருப்பரங்குன்றத்திற்கு அண்ணனை நியமித்தார்கள்.  தஞ்சாவூர் அண்ணன் வைத்தியலிங்கத்தை நியமித்தார்கள். ஆகவே, மூன்று பேரையும் தலைமை ஏற்று நடத்த வேண்டும் என்று அறிவித்தார்கள்.  நாங்கள் மூன்று பேரும்

எங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிக்குச் சென்று தேர்தல் பணியாற்றினோம். அப்பொழுது, இங்கே அரவக்குறிச்சிக்கு வந்து கழக நிர்வாகிகளை சந்தித்தபொழுது சொன்னார்கள், தயவு செய்து இவரை ஜெயிக்க வைத்துவிடாதீர்கள், இவர் வந்துவிட்டால், நீங்கள் எண்ணியது போல் நடக்கமாட்டார், நிச்சயம் துரோகம் ஒன்றுதான் மனதிலே இருக்கும் என்று அப்பொழுதே தெரிவித்தார்கள். ஆனால், நாங்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. இன்றைக்கு போரிலே தளபதி என்ன உத்தரவை பிறப்பிக்கின்றாரோ, அந்த உத்தரவுக்கு கட்டுப்பட்டு நாங்கள் நடப்பதைப் பார்த்த சிப்பாய் நடப்பதைப் போல, புரட்சித்தலைவி அம்மா என்ற தளபதி எங்களுக்கு இட்ட கட்டளையை சிப்பாய் போல நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அந்தப் பணியை மேற்கொண்டு, நான் மட்டுமல்ல, இந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் திரு விஜயபாஸ்கர் அவர்களும் அவரோடு இணைந்து, மேடையிலே வீற்றிருக்கின்ற பல்வேறு அமைச்சர்கள் இந்த மாவட்டத்திற்கு இங்கே மின்சாரத்துறை அமைச்சர் திரு தங்கமணி அவர்களை இந்த மாவட்டத்திற்கு அம்மா அவர்கள் பொறுப்பாளராக வைத்திருந்தார். அவரும், மற்ற அமைச்சர்களும், இங்கே இருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு தேர்தல் பணியாற்றுவதற்காக பல்வேறு மாவட்டங்களிலிருந்து புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தேர்தல் பணியாற்றவேண்டும் என்று ஆணை பிறப்பித்தற்கிணங்க நாங்கள் எல்லாம் பணியாற்றினோம். அப்பொழுது கிட்டத்தட்ட 25 நாட்கள் முகாமிட்டு எல்லா பகுதிகளுக்கும் சென்றோம். எனக்கு முன்னாலே இந்த மாவட்ட அமைச்சர் திரு விஜயபாஸ்கர் சொல்லியதைப் போல, இரவு, பகல் பாராமல், நானும் என்னோடு இந்த மாவட்ட அமைச்சர், மற்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு மாவட்ட செயலாளர்கள், பல்வேறு கழக நிர்வாகிகள், இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூாட்சி அனைத்து நிர்வாகிகளும் இணைந்து பணியாற்றினோம். கிட்டத்தட்ட ஒரு booth-க்கு 20 பேர், கிட்டத்தட்ட 6000 பேர் தேர்தல் பணியாற்றினோம். இரவு, பகல் பாராமல் வெற்றிக்காக பாடுபட்டதன் விளைவு தான் அவர் வெற்றி பெற்றார், அவர் வெற்றி பெற்றும் கூட, அந்த சட்டப்பேரவை உறுப்பினர் நன்றி சொல்லக் கூட போகவில்லை என்று அமைச்சர் திரு விஜயபாஸ்கர் அவர்கள் குறிப்பிட்டார். அப்பொழுது நாங்கள் வாக்கு சேகரிக்க சென்ற இடமெல்லாம் சொன்னார்கள், இவருக்கா நீங்கள் ஆதரவு கேட்கின்றீர்கள், இவர் அமைச்சராக இருக்கின்றபொழுதே யாரையும் பார்க்கமாட்டார், வீட்டில் இருந்து கொண்டே இல்லை என்று சொல்வார். இவருக்கு போய் நீங்கள் வாக்கு கேட்கிறீர்களே என்று சொன்னார்கள், அப்பொழுதெல்லாம் எங்களுக்கு புரியவில்லை, இப்பொழுது தான் எங்களுக்குப் புரிகிறது. அவர் எப்படிப்பட்டவர் என்பதை அவர் புரியவைத்து விட்டார். ஒரு மனிதன் பிறக்கின்றான், வாழ்கின்றான்,

இறக்கின்றான், ஆனால் இடைப்பட்ட காலத்திலே என்ன செய்கின்றான் என்பது தான் அவன் இறுதியாக போகின்றபோது மக்கள் பேசுகின்ற பேச்சு. ஆனால், இவருக்கு பேசப்படுகின்ற பேச்சு, இவர் வாழ்க்கையிலே ஒரு கரும்புள்ளி தான் பேசுவார்கள். இந்த இயக்கத்திற்கும், ஆட்சிக்கும் களங்கம் விளைவித்திருக்கின்றார். ஆகவே, இப்படிப்பட்டவர் சமூகத்திலே எவ்வளவு உயர்ந்தாலும், அவர் இப்பொழுது செய்கின்ற துரோகம் மறையாது, எப்போதும் வரலாறு சொல்லிக்கொண்டே இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நினைவு கூர்ந்து, இதைப் பேசக்கூடாது என்றுதான் நினைத்தேன், ஏனென்றால், இந்த மாவட்ட மக்களுக்கு தெரிய வேண்டுமென்று தான் பேசினேன். ஏனென்று சொன்னால், இது வரலாற்று நாயகன் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழா. நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக இறைவனால் கொடுக்கப்பட்ட கொடை, எம்.ஜி.ஆர். அப்படிப்பட்ட எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் இதை பேசக்கூடாது என்று நினைத்தேன், பேச வைத்துவிட்டார். ஏனென்றால், இந்த இயக்கம் சாதாரண இயக்கமல்ல, இருபெரும் தலைவர்கள் இரவு, பகல் பாராமல் உழைத்து, உழைத்து கட்டிக் காத்த கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். ஆகவே, அப்படிப்பட்ட உணர்வுபூர்வமான கட்சியை உருவாக்கிய தலைவர்கள், ஆட்சி உருவாக்கினார்கள். அப்படிப்பட்ட ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று ஒருவர் நினைத்தால், எப்படி பேசாமல் இருக்க முடியும்? அப்படிப்பட்ட துரோகச் செயல் நினைக்கின்ற வரை இந்த மாவட்டத்திலே, சட்டமன்ற உறுப்பினராக இருந்தார், அதுதான் இந்த மாவட்ட அமைச்சர் வருத்தத்தோடு சொன்னார், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் இப்படி செய்துவிட்டாரே என்று அத்தனை மக்களும் இன்றைக்கு எண்ணிக் கொண்டிருப்பதைப் பார்த்து மனம் நொந்து போய் விட்டது என்று சொன்னார்கள். இவ்வளவு பெரிய நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தாலும் கூட, இந்த தருணத்திலே இப்படிப்பட்ட செயலில் ஈடுபட்டிருப்பது எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது, எங்களது மாவட்டத்திற்கு அவப் பெயரை இவர் ஏற்படுத்திவிட்டார் என்ற செய்தியை என்னிடத்தில் சொன்னார். ஆகவே, நான் சொன்னேன், இவர் மட்டுமல்ல, இந்த செந்தில் பாலாஜி மட்டுமல்ல, அவரோடு எவ்வளவு பேர் சேர்ந்தாலும் இங்கே வந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகளும், தொண்டர்களும், பொதுமக்களும் எங்கள் பக்கம் இருக்கின்றவரை எவராலும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது. அவர்களைப் போல் எத்தனை பேர் பிறந்து வந்தாலும், இந்த இயக்கத்தையோ, கட்சியையோ, ஆட்சியையோ அசைக்கவோ, ஆட்டவோ, அழிக்கவோ முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அவர் நினைக்கின்றார், இந்த ஆட்சியை கவிழ்த்து விடலாம், இந்தக் கட்சியை உடைத்துவிடலாம் என்றெல்லாம். நானும், அண்ணனும், எங்களது அனுபவமும்

தான் அவரது வயதாக இருக்கின்றது என கருதுகின்றோம். எங்களது அனுபவம் தான் அவரது வயதாக இருக்கிறது என்று கருதுகின்றோம். எனவே, நாங்கள் உங்கள் வயதளவிற்கு அனுபவத்தை பெற்றிருக்கின்றோம். உங்களைப் போல் எத்தனையோ பேரை பார்த்துவிட்டுத் தான் இந்த மேடையிலே நாங்கள் வீற்றிருக்கின்றோம். ஆகவே, உங்களுடைய சலசலப்பிற்கோ, நீங்கள் செய்கின்ற சூழ்ச்சிக்கோ அல்லது துரோகத்திற்கோ என்றைக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையோ, கட்சியையோ வீழ்த்தமுடியாது என்பதை இந்த நேரத்திலே திடமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று உங்களுடைய மாவட்ட அமைச்சரும், மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டப்பேரவை உறுப்பினரும் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவை ஒரு சிலவற்றை நிச்சயமாக நிறைவேற்றிக் கொடுப்போம். பல்வேறு கோரிக்கைகளை நீண்ட பட்டியலோடு அவர் தெரிவித்திருக்கின்றார். அதில் இடம்பெற்றிருக்கின்ற பெரும்பாலனவைகளை செய்து கொடுப்போம் என்று இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன்.

**இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கும் கழகக் கண்மணிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் வாகனங்களில் பத்திரமாக ஊர் போய் சேர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

இந்த விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. விஜயபாஸ்கர் அவர்களுக்கும்,
அவருக்கு உறுதுணையாக இருந்த
மாண்புமிகு மக்களவை துணைச்சபாநாயகர்
அவர்களுக்கும்,
சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்,

மற்றும் கழக செயல் வீரர்களுக்கும்,
நல்ல உள்ளங்களுக்கும்
எனது மனமார்ந்த பாராட்டுகளை
தெரிவித்துக் கொண்டு

இந்த அரசு உங்களின் சேவகனாக
தொடர்ந்து பணியாற்றும் என்பதை
தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி! வணக்கம்!

******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.10.2017) கரூர்ல் நடைபெற்ற பாரத ரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் கரூர் மாவட்டத்திற்கு அறிவித்த முக்கிய அறிவிப்புகள்**

1) **கரூர் மாவட்டம், காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மாயனூர் கதவணைக்கு செல்லும் வழியில் உள்ள கால்வாய்களின்மேல் புதிய பாலங்கள் கட்டப்படும்.**

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூர் கிராமத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே கதவணையுடன் கூடிய இருவழிச்சாலை பாலம் அமைக்கப்பட்டுள்ளது. காவிரிக் கரையின் வலது கரைக்குப் பின்புறம் அதனை ஒட்டியே அடுத்தடுத்து தென்கரைக் கால்வாய், கிருஷ்ணராயபுரம் கால்வாய், புதுக்கட்டளை மேட்டு வாய்க்கால் ஆகிய மூன்று பாசன வாய்க்கால்கள் உள்ளன.

அவற்றின் குறுக்கே தற்போது மதகுகளுடன் கூடிய ஒரு பழைய ஒருவழிப்பாதை பாலம் உள்ளது. இது போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, இந்தப் பழைய பாலங்களுக்கு அருகிலேயே ஒரு புதிய இருவழிப்பாதையுடன் கூடிய 80 மீட்டர் நீளமுள்ள பாலம் சுமார் ஏழு கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

2) **சின்னதாராபுரம்** பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் கூடலூர் மேல்பாகம் ஊராட்சி, பெரியதிருமங்கலம் பகுதியில் **அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்க ஆய்வு** கள ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**3) தாந்தோணி ஒன்றியத்தில் 14** ஊராட்சிகளைச் சேர்ந்த **274** ஊரக குடியிருப்புகளில் உள்ள **64** ஆயிரத்து **320** மக்கள் பயன்பெறும் வகையிலான **புதிய கூட்டுக் குடிநீர் திட்டம்** செயல்படுத்த திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அடுத்த ஆண்டு இப்பணி மேற்கொள்ளப்படும்.

**4)** கரூர் மாவட்டம், பசுபதி பாளையம் காவல் நிலையத்தின் எல்லைகள் மிகவும் விரிவாகவும் அதிக மக்கள் தொகை கொண்டுள்ளதாகவும் உள்ளதால். **தாந்தோணி மலையில் ஒரு புதிய காவல் நிலையம்** ஏற்படுத்தப்படும்.

**5) கரூர் பேருந்து நிலையத்திற்கு அருகில்** போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில் ஒரு சாலை மேம்பாலம் அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

**6) கரூர் நகரில் ஒரு புதிய அணுகு சாலை**

கரூர் நகரத்தில், கோவை ரோடு முதல் பைபாஸ் ரவுண்டானா வரை அமைந்துள்ள, கோவை சாலையில், மிகவும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் சிரமத்துக்குள்ளாகிறார்கள். எனவே, கரூர் நகராட்சி மூலம், கரூர் ரயில்வே சந்திப்பு முதல் சேலம்–மதுரை தேசிய நெடுஞ்சாலை வரை கரூர் நகருக்கு ஒரு புதிய அணுகு சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**7)** குளித்தலை நகரில் தற்போது இருக்கும் பேருந்து நிலையம் மிகவும் சிறியதாக உள்ளதால், பொதுமக்கள் சென்று வருவதற்கும், பேருந்துகள் சென்று வருவதற்கும் மிகவும் சிரமமாக உள்ளதைக் கருத்தில் கொண்டு, புதிய பேருந்து நிலையம் அமைக்கப் பரிசீலனை செய்யப்படும்.

**8)** கோவை–ஈரோடு தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் (NH-67) அதிக விபத்துகள் ஏற்படுவதால் கி.மீ.218/0 – 220/0 வரை உள்ள நான்கு வழிச்சாலைப் பகுதியில், விபத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒரு உயர்மட்ட பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**9) கரூர் மாவட்டத்திற்கு மேம்பாலங்கள்**

- கரூர் – ஈசநத்தம் – கூம்பூர் – வேடசந்தூர் சாலை கி.மீ.17/6–இல் உள்ள தரைமட்டப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

- வைரமடை–தொப்பம்பட்டி சாலை கி.மீ.16/6–இல் உள்ள குறுகிய பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டப்படும்.

- செல்லிவலசு – வெண்ணெய் கோதூர் சாலை கி.மீ.0/2–இல் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

- மணப்பாறை–குஜிலியம்பாறை சாலை கி.மீ.27/6–இல் பாலம் கட்டப்படும்.

- பாலவிதி – கடவூர் – அய்யலூர் சாலையில் கி.மீ.8/6–லும் மற்றும் கி.மீ.12/6–லும் பாலங்கள் கட்டப்படும்.

- இனங்கூர் நல்லூர் சாலை கி.மீ.5/10–இல் பாலம் கட்டப்படும்.

**10) காவிரி ஆற்றின் குறுக்கே புகழூர் அருகில் தடுப்பணை**

கரூர் மாவட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், புகழூர் பகுதியில் காவிரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட மீண்டும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) ரூபாய் 3 கோடி வழங்கும்.

********

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**